**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**விருதுநகர் மாவட்டம் (இ) ஸ்ரீவில்லிபுத்தூர்**

**முன்னிலை:– திரு.க.ஜெயக்குமார், பி.எல்.,எல்.எல்.எம்.,**
**முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி**

**2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17ம் நாள் வியாழக்கிழமை**

**I.A.No.3/2025**
**in**
**C.O.S.No.40/2019**

E.S.M.இருளப்பன், ...மனுதாரர்/4ம் பிரதிவாதி

**/எதிர்/**

M/s.R.K.Match Company Pvt Ltd.,
through its Managing Director,
G.S.Karthikeyan ...எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 02.04.2025–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.வெங்கடேஷ், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.ராஜபாண்டி, அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரைகளை கேட்டும், இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிட கோரி U/o.9 Rule 7 of CPC ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்:–**

இம்மனுவில் மனுதாரர் அசல் வழக்கில் 4ம் பிரதிவாதி ஆவார். எதிர்மனுதாரர் /வாதி முற்றிலும் பொய்யான சங்கதிகளை கூறி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கில் மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்து அசல்

வழக்கானது விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டிருந்தபோது அசல் வழக்கில் வாதியை குறுக்கு விசாரணை செய்ய 29.11.2024ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்தபோது வேலை நிமித்தமாக தான் வெளியூர் சென்று விட்டதால் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி வாதியை குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை. எனவே, தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட 29.11.2024ம் தேதிய ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து தாவா மனுவை அனுமதிக்கவேண்டுமென கோரி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்:–

தாவா மனு சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. தாவா மனுவில் மனுதாரர் கேட்டுள்ள பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதல்ல. உண்மையில் தாவா வழக்கு இந்நீதிமன்றத்தில் கட்டாய விசாரணைக்கு ஏற்பட்டு எதிர்மனுதாரர்/வாதியானவர் PW–1 ஆக கடந்த 10.09.2024ம் தேதி முதல்விசாரணை செய்யப்பட்டு 25.09.2024ம் தேதி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு எதிர்மனுதாரர்/வாதியை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய 01.10.2024, 15.10.2024, 19.10.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டு மேற்படி அனைத்து வாய்தாக்களிலும் எதிர்மனுதாரர்/வாதி குறுக்கு விசாரணைக்கு இந்நீதிமன்றத்தில் நேரில் தவறாமல் ஆஜரான நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் யாரும் ஆஜராகாமல் No Representation என குறிப்பிடப்பட்டு இறுதியாக கடந்த 07.11.2024 வாய்தாவில் எதிர்மனுதாரர்/வாதி குறுக்குவிசாரணைக்கு ஆஜரான நிலையில் 1 முதல் 4 பிரதிவாதிகள் ஆஜராகாத காரணத்தினால் இந்நீதிமன்றத்திலிருந்து அவர்களுக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டு, நோட்டீஸை பெற்றுக்கொண்ட பின்பும் 2,4 பிரதிவாதிகள் 29.11.2024ம் தேதிய வாய்தாவில் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் அவர்கள் மீது

ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, 1, 3 பிரதிவாதிகளுக்கு Await Notice என்று வாய்தா ஏற்பட்டு கடந்த 20.01.2025-ம் தேதி நீதிமன்றத்தில் அனுப்பப்பட்ட நோட்டிஸை பெற்றுக் கொண்ட பின்பும் 1, 3 பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜராகாததால் மேற்படியார்கள் மீது ஒருதலைப்பட்ச உத்தரவு பிறப்புவிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பு PW-1 சாட்சி முடிக்கப்பட்டு எதிர்மனுதாரர்/வாதி தரப்பு கூடுதல் சாட்சியாக PW-2, 29.01.2025-ம் தேதி விசாரணை செய்யப்பட்டு, Ex.A-13 ஆவணம் குறியீடு செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டு, தீர்ப்புக்காக 19.02.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டிருந்தது என்பதே உண்மையாகும். இந்நிலையில் மேற்படி உண்மை நிகழ்வுகளுக்கு விரோதமாக 29.11.2024-ம் தேதி மனுதாரர்/4-ம் பிரதிவாதி தரப்பில் PW-1 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், மேற்படி வாய்தா தேதியன்று மனுதாரர்/4-ம் பிரதிவாதி வெளியூர் சென்றுவிட்டதாக கூறும் நிலையில், வெளியூர் என்று வெறுமனே கூறி எந்த ஊர் என்று குறிப்பிடாததில் இருந்தே மனுதாரர்/4-ம் பிரதிவாதி தாவா மனுவை நல்லெண்ணத்தின் பேரில் தாக்கல் செய்யவில்லை என்பது நன்கு துலங்கும். மேலும் மனுதாரர்/ 4–ம் பிரதிவாதி மீது கடந்த 29.11.2024-ம் தேதி பிறப்புவிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரும் மனுவை இடைப்பட்ட வாய்தா தேதிகளான 09.12.2024, 20.01.2025. 29.01.2025 ஆகிய தேதிகளில் தாவா மனுவைத் தாக்கல் செய்ய எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்துவிட்டு தாவா வழக்கின் நீதிமன்ற நடவடிக்கையை follow செய்து வந்து தீர்ப்புக்காக வழக்கு ஏற்பட்ட நிலையில் தாவா மனுவை தாக்கல் செய்துள்ளார் என்பது நன்கு துலங்கும். இதிலிருந்தே மனுதாரர்/4-ம் பிரதிவாதி வழக்கை நடத்த வேண்டுமென்ற எண்ணம் இல்லாமல் வழக்கை காலதாமதப்படுத்த

வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இருந்து வருகிறார் என்பது நன்கு துலங்கும். தாவா வழக்கு தாக்கல் செய்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகிய நிலையிலும், எதிர்மனுதாரர்/வாதிக்கு தற்போது வயது 75 ஆக இருந்தபோதிலும், நீதிமன்றத்தில் ஒவ்வொரு விசாரணைக்கும் ஆஜரான நிலையில், மனுதாரர்/4-ம் பிரதிவாதி வேண்டுமென்றே ஆஜராகாமல் இருந்துவிட்டு தற்போது வாய்தாவிற்கும் தாவா வழக்கை காலம் கடத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனுவைத் தாக்கல் செய்துள்ளார். தாவா வணிக வழக்கு தீர்ப்புக்காக ஏற்பட்டுள்ள நிலையில் மனுதாரர்/4-ம் பிரதிவாதி ரீ-ஒப்பன் மனுத் தாக்கல் செய்யாமல் ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக் கோரும் மனுவை மட்டும் தாக்கல் செய்திருப்பதால் தாவா மனு எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யக் கூடியதாகும். மேலும் மனுதாரர்/4-ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதியின் டிரேட் மார்க்கை பயன்படுத்தி மோசடியாக தீப்பெட்டி செய்து கொண்டு, எதிர்மனுதாரர் /வாதியின் வியாபாரத்தை கெடுத்து வருகிறார். இதனால் மிகுந்த மனஉளைச்சலுக்கு ஆளாக்கப்பட்டு நீதிமன்றத்தில் நீதி கிடைக்க எதிர்மனுதாரர்/வாதிக்கு வழக்கின் பயனை அடையவிடாமல் வீண் காலதாமதம் ஏற்படுத்த வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் தாவா மனுவைத் தாக்கல் செய்துள்ளார். எனவே, தாவா மனுவை எதிர்மனுதாரர்/வாதியின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிர்மனுதாரர்/வாதி பக்கம் பிரார்த்திக்கப்படுகிறது.

4) இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இம்மனுவில் உபய தரப்பிலும் வாய்மொழி சாட்சியமோ, ஆவண சாட்சியமோ இல்லை.

6) இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டது.

**பிரச்சினைக்கான தீர்வு:-**

7) அசல் வழக்கில் மனுதாரர்/4ம் பிரதிவாதிக்கு எதிராக இந்நீதிமன்றம் பிறப்பித்த ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்து உத்தரவிட கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8) வழக்கு கோப்புக்களை பரிசீலனை செய்ததில், நிரந்தர நிலையுறுத்து கட்டளை பரிகாரம் கோரி இம்மனுவின் எதிர்மனுதாரர் அசல் வழக்கின் வாதியால் இம்மனுவின் மனுதாரர் மற்றும் மேலும் 4 நபர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், வாதியின் வழக்கை ஆட்சேபித்து 1 முதல் 4 பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்து, பின்னர் இந்நீதிமன்றத்தால் எழுவினாக்கள் வனையப்பட்டு, பின்னர் விசாரணைக்காக வழக்கு நிலுவையிலிருக்கும் நிலையில், 1 முதல் 4 பிரதிவாதிகளால் இ.ம.எண்.2/2020 தாக்கல் செய்யப்பட்டு மேற்படி மனு தள்ளுபடி செய்யப்பட்டு பின்னர் வாதி தரப்பில் வா.சா.1 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணைக்காக 01.10.2024, 15.10.2024, 19.10.2024, 07.11.2024 ஆகிய தேதிகளில் வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் பிரதிவாதிகள் ஆஜராகவில்லை என்பதால், மேற்படி பிரதிவாதிகளுக்கு நீதிமன்ற அறிவிப்பு அனுப்பியும், நீதிமன்ற அறிவிப்பை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்ட பின்னரும் 15.11.2024, 29.11.2024ம் தேதிகளில் பிரதிவாதிகளை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால், 29.11.2024ம் தேதியன்று 1 மற்றும் 4ம் பிரதிவாதிகளும், 20.01.2025ம் தேதிகளில் 2 மற்றும் 3ம் பிரதிவாதிகள் ஒருதலைப்பட்சமாக்கப்பட்டு உள்ளார்கள். பின்னர் வாதி தரப்பில் கூடுதல் சாட்சியாக வா.சா.2 விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.13 ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டு, வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு, வாதி தரப்பில் வாதுரை கேட்கப்பட்டு,

வழக்கு தீர்ப்புக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், 4 ம் பிரதிவாதிக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை நீக்கரவு செய்ய கோரி 4 ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

9) தாவா வழக்கு தீர்ப்புக்காக வாய்தா ஏற்பட்டிருந்த நிலையில், மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்திருப்பது என்பது அசல் வழக்கை எவ்வகையிலேனும் இழுத்தடிக்க வேண்டும் என்று எண்ணத்தில் தான் மனுதாரர்/4 ம் பிரதிவாதி இம்மனு தாக்கல் செய்திருப்பதாக எதிர்மனுதாரர்/வாதி ஆட்சேபித்துள்ளார். அசல் வழக்கானது மனுதாரர்/4 ம் பிரதிவாதி, எதிர்மனுதாரர்/வாதியின் டிரேட் மார்க்கை பயன்படுத்தி மோசடியாக தீப்பெட்டி செய்து கொண்டு, எதிர்மனுதாரர்/வாதியின் வியாபாரத்தை கெடுத்து வருவதாக கூறி வாதியால் நிரந்தர நிலையுறுத்து கட்டளை பரிகாரம் கோரி வணிக வழக்காக தாக்கல் செய்துள்ள நிலையில், மனுதாரர் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் தொடர்ச்சியாக நீதிமன்றத்தில் ஆஜராகாமல் இருந்துவிட்டு தான் வெளியூர் சென்றிருந்ததால் வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று மனுதாரர் தரப்பில் கூறப்படும் காரணம் என்பது மனுவிற்காக சொல்லப்படும் காரணங்களாக காணமுடிகிறது. இருப்பினும் மனுதாரருக்கு அசல் வழக்கில் அவருடைய தரப்பு வழக்கினை நிரூபிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்க வேண்டியது நீதிநலனுக்கு உகந்ததாக காணும் நிலையிலும், இந்த மனுதாரர் நீதிமன்றத்திற்கு ஆஜராகுவதற்கு பல்வேறு வாய்ப்புகள் வழங்கப்பட்ட நிலையிலும் அவர் ஆஜராகாமல் வழக்கை இழுத்தடித்ததாக இந்நீதிமன்றம் கருதும்நிலையில், மனுதாரர் தாக்கல் செய்த இம்மனுவினை செலவுத் தொகையுடன் அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

10) முடிவாக, மனுதாரர், எதிர்மனுதாரருக்கு செலவுத் தொகையாக ரூ.5000/-ஐ (ரூபாய் ஐந்து ஆயிரம் மட்டும்) 28.04.2025 ம்

தேதிக்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் எனவும், தவறினால் மனு தள்ளுபடி செய்யப்படும் எனவும் உத்தரவிடப்படுகிறது. மனு அழைக்க 29.04.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

**<u>உபயர தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை**

K JEYAKUMAR Digitally signed by K JEYAKUMAR

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**விருதுநகர் மாவட்டம் (இ)**
**ஸ்ரீவில்லிபுத்தூர்.**

முதன்மை மாவட்ட நீதிமன்றம்
ஸ்ரீவில்லிபுத்தூர்
I.A.No.3/2025
in
C.O.S.No.40/2019
செவ்வை/வரைவு உத்தரவு
நாள்:17/04/2025